# வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா வடக்கு

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022

### தமிழ்மொழியும் இலக்கியமும்

al Education Office- Vavuniya North Zonal Education Office- Vavuniya North Zonal Education Office- Vavuniya North Zonal Education Office- Vav

சுட்டெண் ..................................................... தரம்: 06 நேரம் - 2.00 மணித்தியாலம்

## பகுதி I

- **மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1) "சாதங்கறிவகைகள் சமைப்பதுவுமென்னாலே" இங்கு சாதம் என்பதன் கருத்து யாது?
   1) சோறு 2) பிட்டு 3) இடியப்பம் 4) ரொட்டி

2) "ஞாயிறு போற்று" இங்கு ஞாயிறு என்பதால் குறிப்பிடப்படுவது எது?
   1) சந்திரன் 2) சூரியன் 3) புதன் 4) வெள்ளி

3) "தம்கண் விழுமம் துடைத்தவர் நட்பு" இங்கு விழுமம் என்பதன் எதிர்ப்பதம் யாது?
   1) நட்பு 2) அன்பு 3) இன்பம் 4) துன்பம்

4) பறவைகளுக்குச் சுயநலம் இல்லை. இங்கு சுயநலம் என்பதன் எதிர்ப்பதம் யாது?
   1) பொதுநலம் 2) உடல்நலம் 3) உளநலம் 4) சுகநலம்

5) தமிழ் மெய்யெழுத்துக்களின் எண்ணிக்கை எத்தனை?
   1) 12 2) 18 3) 216 4) 247

6) பின்வருவனவற்றுள் கிரந்தவெழுத்தாக அமையும் தொகுதி?
   1) அ, ஆ, இ 2) ஷ, ஜ, ஹ 3) ஒ, ஓ, ஔ 4) ல், ள், ழ்

7) தம்பி பந்து அடித்தான். இங்கு வந்துள்ள செயற்படுபொருள் யாது?
   1) தம்பி 2) பந்து 3) அடித்தான் 4) அடி

8) வாக்கியங்களில் உணர்ச்சியை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படும் குறியீடு எது?
   1) முற்றுப்புள்ளி 2) வினாக்குறி 3) அடைப்புக்குறி 4) வியப்புக்குறி

9) மரக்கிளை என்பதைப் பிரித்து எழுதினால் வரும் வடிவம்?
   1) மர + கிளை 2) மரக் + கிளை 3) மரம் + கிளை 4) மா + கிளை

10) பின்வருவனவற்றில் பெயர்ச்சொல்லாக அமைவது?
   1) வந்தது 2) இருந்தன 3) படித்தான் 4) மாலை

11) விண்மீன்கள் என்பது?
   1) ஒருமை படர்க்கை 2) பன்மை படர்க்கை
   3) முன்னிலை ஒருமை 4) தன்மை பன்மை

12) "தையலை உயர்வு செய்" என்பது எவ்வாறான வாக்கியம்?

1) வினா வாக்கியம் 2) ஏவல் வாக்கியம்
3) வியங்கோள் வாக்கியம் 4) கலப்பு வாக்கியம்

13) "ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது" இங்கு வந்துள்ள இணைமொழி?

1) ஆடிப்பாடி 2) வேலை 3) செய்தால் 4) அலுப்பிருக்காது

14) இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை என்ற பழமொழியின் கருத்து?

1) மனவெளிப்பாடு 2) ஒற்றுமை 3) திருப்தியற்ற மனம் 4) விடாமுயற்சி

15) முனிவர்கள் வாழுமிடம் எவ்வாறு அழைக்கப்படும்?

1) அந்தப்புரம் 2) விடுதி 3) ஆச்சிரமம் 4) வாடி

16) அம்மாவும், தம்பியும், தங்கையும் கோவிலுக்கு.................... முடிக்கும் சொல்லைத் தெரிவு செய்க.

1) சென்றார் 2) சென்றான் 3) சென்றாள் 4) சென்றார்கள்

17) நரி ஊளையிடும் என்பது போல பன்றி

1) உறுமும் 2) அலறும் 3) பிளிறும் 4) கத்தும்

18) திருக்குறளில் காணப்படும் அதிகாரங்கள் எத்தனை?

1) 130 2) 133 3) 1330 4) 1333

19) பந்தியொன்றில் தவிக்கப்பட வேண்டிய விடயம் யாது?

1) மிகைப்படக் கூறல் 2) துணைக் கருத்துக்களைக் கொண்டிருத்தல்
3) தலைமைப் பொருளைக் கொண்டிருத்தல் 4) கருத்துத் தொடர்பைக் கொண்டிருத்தல்

20) பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தும் போது வரும் தொகுதியைத் தெரிவு செய்க?

அ) ஒருவன் பிறருக்குச் செய்த உதவிக்கு
ஆ) மண்ணுலகும் விண்ணுலகும் கைம்மாறாகக் கொடுத்தாலும்
இ) தனக்கு முன் ஓர் உதவி செய்யாதிருக்க
ஈ) ஒத்தல் அரிது

1) அ, ஆ, இ, ஈ 2) ஈ, இ, ஆ, அ 3) ஆ, இ, அ, ஈ 4) இ, அ, ஆ, ஈ

(20× 2 = 40 புள்ளிகள்)

## பகுதி II

- **எல்லா வினாக்களுக்கு விடை தருக.**

01) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.
   1) தொலைக்காட்சியின் பயன்கள்
   2) நான் சென்ற கல்விச் சுற்றுலா
   3) மழைக்காட்சி
   4) வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்

(20 புள்ளிகள் )

02) கொரோனா என்னும் கொடிய நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் நண்பனுக்கு ஆறுதல் கூறி 50 சொற்களில் கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள் )

03) பின்வரும் வினாக்களுக்கு சுருக்க விடை தருக.
   1) சேவல் பூனைக்குக் கூறிய அறிவுரை யாது?
   2) சரி விகித உணவென்றால் என்ன?
   3) நியூற்றன் எப்போது பிறந்தார்?
   4) கையில் சிலம்புடன் பாண்டியன் அவைக்குள் வந்தவர் யார்?
   5) சூரரைப் போற்று என்பதன் பொருள் யாது?
   6) மூட ஆமை என்ற பாடலை எழுதியவர் யார்?
   7) பறவைகளுக்கு இருக்கின்ற நல்ல பண்புகள் எவையென அறிவண்ணன் குறிப்பிடுகின்றான்?
   8) **NEWS** என்பதன் கருத்து யாது?
   9) பாண்டிமாதேவியின் அழகிய முகம் வாடக் காரணம் யாது?
   10) வேப்பமரத்தில் அமர்ந்த காகத்தின் யோசனை யாது?

( $2 \times 10 = 20$ புள்ளிகள் )

04) பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.
   1) ஆணை :-
   2) வழி :-
   3) ஊண் :-
   4) இசை :-
   5) அழகு :-

( $2 \times 5 = 10$ புள்ளிகள் )